**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.28/2023**

2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

அ.சா.6 (பட்டியல் சாட்சி 6) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்வி | க/பெ.: | மூர்த்தி |
| கிராமம்: | அண்ணா நகர், திருத்துறைப்பூண்டி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | வீட்டு குடித்தனம் |
| வயது: | 55 | முகவரி: | அண்ணா நகர், திருத்துறைப்பூண்டி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 20.06.2025

**முதல் விசாரணை :–**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி தினேஷ் குமார் எனது மகன். சாட்சி பிரியங்கா எனது மருமகள். சாட்சி மூர்த்தி எனது கணவர். சாட்சிகள் மாரிமுத்து, ராஜா, ஸ்ரீதர், தர்மராஜ் ஆகியோர் தெரியுமா என்றால் தெரியும். என் மருமகளை எதிரி மூர்த்தி கிண்டல் செய்ததால் எனது மகனுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. கடந்த 04.05.2022–ம் தேதி அன்று இரவு 07.00 மணியளவில் காசுக்கடைத் தெருவில் எனது மகன் அ.சா.1 ஏன் எனது மனைவியை கிண்டல் செய்கிறாய் என 1–வது எதிரியிடம் கேட்டபோது பிரச்சனை ஏற்பட்டு வீட்டிற்கு வந்து விட்டார். அன்றைய தினம் இரவு 08.30 மணியளவில் எனது மகன் வீட்டில் இருந்தபோது எனது மருமகளை கிண்டல் செய்தது சம்பந்தமாக எனது மகனிடம் ஆஜர் 1–வது எதிரி பிரச்சனை செய்தார். அப்போது எனது மருமகள் பிரியங்கா அதனை தடுத்தபோது எனது மருமகள் முடியை பிடித்து கீழே தள்ளிவிட்டனர். அப்போது எனது மருமகளை எனது மகன் கீழே கிடந்தவரை தூக்கிய போது ஆஜர் 2–வது எதிரி அப்போது கத்தியை ஆஜர் 1–வது எதிரியிடம் கொடுத்து எனது மகனை குத்த சொன்னார். எனது மகனின் விலாப்பகுதி, கழுத்துப்பகுதி, முதுகுப்பகுதியிலும்,

1–வது எதிரி கத்தியால் குத்தினார்கள். கத்தியால் குத்தியதும் எனது மகனுக்கு இரத்தக்காயங்கள் ஏற்பட்டு இரத்தம் கொட்டியது. பின்னர் அவரை மாரிமுத்து, சரவணன் ஆகியோர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று மருத்துவமனையில் சேர்த்தார்கள். அதன் பின்னர் 1–வது எதிரி காவல் நிலையத்தில் சரணடைந்து விட்டார். அதன் பிறகு போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விவரத்தை சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கத்தியை நான் பார்த்தேனா என்றால் இல்லை. அதனுடைய அடையாளங்களோ, நீள அகலமோ தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் குடும்பத்திற்கும், மூர்த்தி குடும்பத்திற்கும் இந்த வழக்கு பதிவதற்கு முன்புவரை எவ்வித விரோதமும் கிடையாது. என் மகன் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் சுயநினைவுடன் இல்லை. என் மகனின் உடலில் 6 இடங்களில் காயங்கள் இருந்தது. என் மருமகளை 1–வது எதிரி கிண்டல் செய்தது எப்போது என்றால் சம்பவ தேதிக்கு 4 நாட்களுக்கு முன்பு. பூக்கடையிலிருந்து வந்தபோது என் மகன் தான் 1–ம் எதிரியிடம் எதற்காக என் மனைவியை கிண்டல் செய்தாய் என்று கேட்டு கண்டித்தார் என்றால் சரிதான். என் மகன் வீட்டிற்கு வந்த பின்னர் எப்போது 1–வது எதிரி அவரது வீட்டிற்கு வந்தார் என்றால் என் மகன் பின்னாலேயே வந்து விட்டார். எதிரிகள் அவர் வீட்டிற்கு என் வீட்டை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். கடைத்தெருவிலிருந்து 1–வது எதிரி வீட்டிற்கு என் வீட்டை கடந்து சென்றபோது என் மகனிடம் தகராறு ஏதேனும் செய்தாரா என்றால் இல்லை. வீட்டிற்கு சென்று விட்டு தான் வந்து தகராறு செய்தார். என் மருமகளை 1–வது எதிரி என்ன சொல்லி கிண்டல் செய்தார் என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை

என்றாலும், 1–வது எதிரி என் மருமகளை கிண்டல் செய்யவில்லை என்றாலும், என் மகனை ஆஜர் எதிரிகள் காமக்குரோதமாக திட்டி கொலை செய்ய முயற்சி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி சம்பவம் கவுன்சில் சரவணன், ஸ்ரீதர், மாரிமுத்து, தர்மராஜ், ராஜா ஆகியோர் நேரில் பார்த்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகனுக்கு அரசியல் ரீதியாக எதிரிகள் உள்ளார்கள் என்றாலும், அவர்களாலோ அல்லது வேறு வகையிலோ ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.